



ஓலை 94| ஓசை 217| நவம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கங் கடிந்து செயல்.**

## பொருள்

**மனம் கலங்காமல் தெளிவோடு மேற்கொண்ட செயலில், இடையிலே சோர்வில்லாமலும், காலம் கடத்தாமலும் ஈடுபட்டு விரைவாகவே செய்ய வேண்டும்**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்

## சந்தக் கலி மண்டிலம்

கண்கள்தனில் சினமும்வர தீயுந்தனைக் காட்டும்;
பெண்கள்தமில் கற்பைச்சொலும் ஆண்கள்தனில் இல்லை;
எண்ணியறம் ஓதிமறை உரைத்தும்ஒழுங் கின்றி
பண்ணுந்தனை ஓதுவானால் பயனும்இலை உணர்க!


வாழும்வகை யுணராப்பெரும் வையந்தனில் பலவாய்
கூழுந்தனைக் குடிக்கவழி அற்றோர்தனைப் பார்த்து
தாழுந்நிலை வந்தும்தடம் மாறாநிலை வேண்டி
ஏழின்உல கெல்லாம்தன தென்றேஇடர் செய்வான்!

கல்வித்தனை கற்றும்பல கருத்தும்சில உரைப்பான்;
எல்லாம்அவன் செயலேஎன எல்லாம்இவன் செய்வான்;
கொல்லும்கொலைக் கருவியென கொன்றேநலன் கெடுப்பான்;
நல்லோன்என நடித்தேசிறு ஒழுக்கம்தனைக் கொள்ளான்!

மறையுந்தனை ஓதிக்கோயில் இடிப்பான்இழி மகனே;
குறையாய்அறி விருக்கும்தறிக் கெட்டஇவன் ஒழுக்கம்,
முறையுமின்றி என்னவிலை என்றேஇவன் கேட்பான்;
நிறைந்தேஅற வழியில்உயிர் வாழ்வோர்மறை ஓதார்!

நிலத்தின்உயிர் வாழக்கதிர் செய்யும்செயல் ஒளியாய்,
நிலத்தில்மழைப் பொழியும்உயர் எண்ணம்தனைப் பெற்றுக்
கலங்கம் இலா உள்ளம்உயர் நிலையும்இனி வந்தால்
உலகும்பல மறையோமறை ஓதுவாரும் வேண்டா!

ஒழுக்கந்தனைக் கொண்டேநிலம் ஓங்கிவுயர் வடைய
பழுத்தப்பெரும் அன்பும்அறம் பண்பும்அறி வடைய
இழுக்கும் இழுப் புக்கெல்லாம் ஈரக்குலை அசையா
ஒழுக்கம்தழைத் திடவேகனிப் போன்றமனம் வேண்டும்!







**இலக்கணக் குறிப்பு:**
நான்கடிகள் ஒரு பாடல். நான்கடிக்கும் ஒரெதுகை பெற்று, முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். பொழிப்பு மோனை அமையாவிடினும் தேவலை. அடி தோறும் நான்கு சீர்கள் வந்து, முதல் மூன்று சீர்கள் கனிச்சீர்கள் வந்து அடி தோறும் ஈற்றுச் சீர் மாச் சீராக வரும். காய்ச்சீரும் அருகி வரும்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

# ஆப்பிள்

படைத்த
உயிரின்
பசி ஆற்றவே
நியூட்டன் விதி
ஆண்டவனுக்குள்ளும்
அறிவியல்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# சிவனும் சீவனும்

**பாவகை : இன்னிசை பஃறொடை வெண்பா.**

எங்கும் நிறைவாய் எதிலும் இருப்பவன்
தங்கும் உயிர்கள் தனதெனக் காப்பவன்
அங்க உயிர்கள் அடங்கலும் ஆற்றலும்
இங்கே சிவனே இயற்றும் இறையென
சங்கினை ஊதுவார் சாக்காடும் ஈயுமிவர்
தங்கிட ஆன்மாவைத் தாயின் கருவினில்
பொங்கிடும் அன்பினில் பூக்கும் மகவென
பங்கம் அகலவே பக்கத்தில் நின்றிடும்
திங்களைச் சூடியோன் திறன்.



கவிஞர் செ. கலைவாணி,மேட்டூர் அணை

# அரணென மொழியைக் காப்போம்

அகர முதல

விளம் + விளம் +மா + விளம் + விளம் +மா)

மொழிகளில் மூத்த மொழியாம்!
.... முனைப்புடன் கற்றுத் தேர்வோம்!
பழிப்போரைப் புறமே வைப்போம்!
.... பகுத்தறி வுடனே வெல்வோம்!
வழியினைக் காட்டும் மொழியே!
.... வாழ்வியல் கூறும் நெறியே!
அழிந்திடா வண்ணம் காக்க
.... அனைவரும் உறுதி யேற்போம்!



தாய்மொழி போற்ற வேண்டும்!
.... தன்னிறை வெய்த வேண்டும்!
ஓய்விலா உழைப்பு தானே
.... உலகினில் தமிழின் வெற்றி!
ஆய்விலும் சொன்ன கூற்று
.... அவரவர் மொழியே ஏற்றம்!
வாய்த்திடும் வாய்ப்பை ஏற்று
.... வளந்தரும் மொழியைப் போற்று!

அரணென மொழியைக் காப்போம்
.... அகிலமே வியக்கும் வண்ணம்!
உரமென உறுதி யூட்டும்
.... உளத்துடன் வீறு கொள்வோம்!
விரட்டுவோம் பகையைத் தாக்கி!
.... வெற்றியைக் காண வேண்டின்
புரட்சியைத் தோற்று விப்போம்
.... பொங்கிடும் உணர்வி னோடு!

பாவலர்மணி மணிமேகலை, ஓசூர்

# அன்றைய தீபாவளி

நினைவில் நிற்கும்
நெஞ்சம் நிறைந்த
அன்றைய தீபாவளி.



தீபாவளி வந்ததும்
திருவிழா போல
களைகட்டும் வீடுகள்.

பொருளாதார சிக்கனம் காரணமாக.
பொதுவாக ஒரே நிறத்தில் எடுக்கப்படும்
துணிகள்.

வருடத்திற்கு ஒரு
புத்தாடை என்பதால்
வாஞ்ஜையுடன் தொட்டு மகிழ்வோம்.

இன்னும் விடியவில்லையா
என்று மணி பார்த்து
உறங்காத நிமிடங்கள்.

உடன்பிறப்புகளுடன்
உடன்பாடோடு
பிரித்துக் கொள்ளும்
பட்டாசுகள்.

ஆவி பறக்கும்
இட்லியே எங்களுக்கு
அருமையான பதார்த்தம்.

இவையெல்லாம்
புலனத்தில் சேகரித்து வைத்த
புகைப்படங்கள் அல்ல.

பூவான இதயத்தினுள்ளே
பொதிந்து கிடக்கும்
பொக்கிஷங்கள்.

இன்றோ
தொலைக்காட்சி முன்னே
தொலைந்து போகும்
பண்டிகைகள்.

திரையரங்குங்களால்
திருடப்படுகிறது
தித்திக்கும் தீபாவளிகள்.

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# கொலுசே! கொலுசே!

கவர்ச்சியா பிரியமா
விடை காணாது
முத்தமிட்டாயே
நினைவிருக்கிறதா?

ஊர்த் திருவிழாவில்
உன்வருகைக்காக
தண்ணையில் கிடப்பேனே
நினைவிருக்கிறதா?

கரும்புக்காட்டில் மடைதாண்டி
எனைக் காண வருகையில்
சோகை தீண்டிய இடங்களில்
நான் தீண்டுகையில் சிலிர்ப்பாயே
நினைவிருக்கிறதா?

பொங்கலுக்கு புதுக்கொலுசு
வாங்கித்தந்ததை
வரப்புமேட்டிலேயே
போட்டுவிடச்சொல்லி
ஓசை காட்டினாயே
நினைவிருக்கிறதா?

ஓடிவரும் உன்
மூச்சுக் காற்றில் காத்தாடி
பறக்கவிட்டதும்
கோபத்தில் துடிப்பாயே
நினைவிருக்கிறதா?

காணாமல் போன
சில நிமிடங்களில்
சந்தை வளாகத்தையே
அழுகையில் நனைத்தாயே
நினைவிருக்கிறதா?

பிறந்தநாளுக்காக
வாழ்த்திட வாயெடுக்கையில்
ஒள்றைச்சொல்லை
ஒன்றாய் உச்சரித்தோமே
நினைவிருக்கிறதா?



எட்டிப் பார்க்காத ஆலயத்தை
உன் வருகைக்காக
ஏழு முறையாவது
வலம் வந்தேனே
நினைவிருக்கிறதா?

ஊர் மேடைகளில்
என் குரல் ஒலிக்கையில்
எட்டிப் பார்த்து
வாசலில் புன்னகைப்பாயே
நினைவிருக்கிறதா?

வேலை தேடுதலின்
ஒவ்வொரு முயற்சிக்கும்
கடவுளுக்கு கையூட்டுக் கொடுத்து
வேண்டுதல் வைப்பாயே
நினைவிருக்கிறதா?

வெள்ளி தோறும்
அம்மனாய் காட்சி தருவாயே
நினைவிருக்கிறதா?

எப்போதாவது நிகழும்
சிறுதொடுதலுக்காக
விழியில் கோபம்
இதழில் புன்னகை அருள்வாயே
நினைவிருக்கிறதா?

என்னைக் காணாது
ஞாயிறுகளின் மதியம்
என் நண்பர்களைச் சபிப்பாயே
நினைவிருக்கிறதா?

ராஜகுமாரனாய் கனவுகளில்
எனைக் கண்டதாய்
மகிழ்ச்சியில் துள்ளுவாயே
நினைவிருக்கிறதா?

அடிபட்டுக் கிடந்த
ஆறுநாள்களும்
உண்ணாவிரதமிருந்து
உயிர் கொடுத்தாயே
நினைவிருக்கிறதா?

ஆண்டுகள்
இரட்டைக் குறிஞ்சியைப்
பூக்க வைத்து நகர்ந்திட
அவரவர் இணையோடு
ஆலயத்தில் சந்திக்கையில்
நினைவிருக்கிறதா என
பேசிக் கொண்டன நம் விழிகள்.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

30. பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை

மணிமேகலை கேட்டவர்க்கு தானம் செய்தாள்
தணிவுடன் சீலங்களின் வழி நின்றாள்
பணிவோடு புத்தன் தன்மம் சங்கம்
முத்திறமணிகளை மனதார வணங்கினாள்
( சீலம்: ஐவகை , கொல்லாமை, பொய் சொல்லாமை
களவின்மை, காமமின்மை, இரவாமை)

புத்தர் தோற்றம் :
மனிதன் நல்லறிவின்றி நிரம்பியிருந்த காலம்
புனிதரான புத்தர் பூமிக்கு அவதரித்தார்
தனியாக போதியின் கீழே எழுந்தருளினார்
இனிமையான அந்த இடம் புத்தகயை

அவர் மாரன் , காமனை வென்றவர்
எவரும் புரிந்துகொள்ளும்படி பேசினார்
தவறுக்கு இடம் கொடாத வாழ்க்கை
அவதாரமாக வந்தவர் அல்லவா புத்தர்

பேதைமை, செய்கை , உணர்வே , அருவுரு
வாயில் , ஊறே , நுகர்வே, வேட்கை
பற்றே , பவமே, தோற்றம் , வினைப்பயன்
ஆன்றோர் வகுத்த இயல்புகள் இவை
அறிந்து நடந்தால் முத்தி அடைவர்
அறியாம்ல நடந்தால் நரகமே கிட்டும்

அளவில்லாத உயிர்கள் உலகில் உண்டு
உளமாற உயிர் வகைகள் ஆறு
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும், பேயும் அன்றோ
நல்வினை தீவினை செய்கையில் அடங்கும்

தீவினை கொலை, களவு, காமம் .
நல்வினை அறம் செய்து வாழ்தல்
நன்மை செய்தால் தர்மம் காக்கும்
வினைக்குத் தக்கவாறு பலன் தரும்
உடலால் அமையும் தீவினை யாதெனில்
அடங்காத கொலை, களவு , காமம்
சொல்லால் அமையும் தீவினை யாதெனில்
பொய். புறங்கூறல், கடுஞ்சொல் ஆகும்



உள்ளத்தால் வரும் தீவினை யாதெனில்
பேராசை, சினம், மயக்கம் முதலியன
தீராத ஆசை எண்ணங்களே காரணம்
தேறாத கவலையில் சிக்கி உழல்வர்

மற்றவர் மகிழ நல்லது செய்
அற்றதை மனதில் கொள்ளாது வாழ்க
உற்றது கொடுக்கும் உன்னத வாழ்வு
பற்றற்ற வாழ்க்கை அமைதி தரும்
(உற்றது : உண்மை)

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

தெய்வங்கள்
ஆயுதங்கள் கேட்கின்றன.
பக்தன்
கோரிக்கை வைக்கிறான்.
தீவிரவாதி
வன்முறையைத் தூண்டுகிறான்.
மனிதன்
மரங்களை அழிக்கிறான்.
ஞெகிழில் திளைத்திருக்கிறது
தேசம்.
/
வாழ்க்கையோடு
கண்ணாமூச்சி
ஆடிக்கொண்டிருப்பவன்
ஒளிந்து விளையாட
இடம் கேட்கிறான்.
இடத்தை காட்டும் முன்
அவனோ
ஒளிந்து கொள்கிறான்.
கல்லறையில்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# படைச்செருக்கு

## அதிகாரம் : 78

தலைமுன் எதிர்க்காதீர்
எதிர் நின்றிட்டதால்.
களத்தின்வேலால் வீழ்ந்துபட்டு
நடுகற்களாய் நிற்போர்பலராம்.

காட்டுமுயல் வீழ்த்தியம்பை
ஏந்தலைவிட களம்நிற்கும்.
யானையெறிந்து மீண்டவேல்
ஏந்தல் சாலச்சிறந்ததே.

பகையஞ்சாவீரமே பேராண்மை
அப்பகைஞர்க்கு வருங்கேட்டில்.
உதவலே அவ்வாண்மையின்
ஆக்கக்கூர்மை எனப்பகர்வராம்.

கைகொள்வேலால் தன்னெதிர்க்கும்
யானைகொன்று மறுவேல்தேடுவோன்.
பகைஞரால் தன்மார்புதைத்த
வேல்பறித்து மகிழ்கின்றான்.

பகைசினந்து நோக்குவிழிகள்
அவரெறிந்த வேல்வருகையில்.
அந்நோக்கை மாற்றியமைத்திடின்
அஃதுவீரர்க்கு தோல்வியன்றோ!.

கழிந்தநாட்களை கணக்கிடுகையில்
விழுப்புண்படா நாட்களெல்லாம்.
வீணாய்த்தவறிய நாட்களாக
நினைப்போனே நல்வீரனாம்.



அதிகாரம் 78
படைச்செருக்கு

உயிர்வாழ்தலைவிட உலகெலாம்
சூழ்ந்துயரும் புகழ்விரும்பும்.
ஆடவனின் கால்கழல்களே
அவனுக்கு அழகுசெய்யும்.

உயிர்க்கஞ்சாது களத்தில்
போரிடும் மாவீரர்தம்மை.
அரசேதடுத்திடினும் தம்மனவூக்கத்தில்
சிறிதுங்குன்றாது நிலைப்பர்.

தம்வாய்சூளுரை தவறாது
போர்புரிந்து சாகத்துணிவோரை.
சூளுரைப் பிழைத்தற்காய்
தண்டித்தல் இயலுமோ?

பேணியோர்விழிகள் நீர்மல்க
சாகப்பெற்றால் அச்சாவவனுக்கு.
தானிரந்தும் பெறத்தக்க
சிறப்பினை உடையதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மத்தாப்புச் சிரிப்பழகி



சரவெடியாட்டம் நடக்கையிலே
மனசுந்தான் அதிருதடி

சாட்டையாட்டம் சுழற்றிதான்
என்னைத்தான் கவர்ந்திட்டியே

தரைச்சக்கரமாச் சுத்துறேன்டி
ஒன்னக் கண்டதுமே

அணுகுண்டா நானிருந்தேன்
கோபுரவெடியா (புஸ்வாணம்) மாத்திட்டியே

லட்சுமிவெடியா நீயிருக்க
ஓலைவெடியா நானானேனே

வத்திகுச்சியா நீயிருந்து
காதலை பத்தவச்சிட்டியே

நித்தமும் இராக்கெட்டா
நானும் பறக்கிறேனே

நூலுல புகைவண்டியா
அங்குமிங்கும் அலையுறேனே

வானத்துல பலவண்ணமாக
வஞ்சியும் சொலிக்கிறியே

அண்ணாந்து பாக்கையில
அழகாக இருக்குறியே

மத்தாப்புச் சிரிப்பழகி
மாராப்புப் பேரழகி

சின்ன இடையழகி
சிங்கார நடையழகி

கண்ணால மயக்குறியே
மாமனத்தான் இழுக்கிறியே

தாவணிதான் வேண்டாமடி
சேலையத்தான் கட்டிக்கடி

பார்வையால கொல்லுறியே
வாலிபத்தை உசுப்புறியே

ஐப்பசியும் பொறந்தாச்சு
கண்ணாலம் பண்ணிக்கிறேன்டி

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வையவன்

மூடர் பிழை இரையாகும் மழை
மழை மொழி தெரியா மக்கள்
மல்லுக்கட்டும் மதியில்லா அரசு

வரியேற்றி வாழ்வை நொறுக்கி
வறுமை பொழுதை வழமையாக
வீம்பு செய்யும் ஆயம்

வெறுமை வீழ்த்தி வறுமை நீக்கி
வளமை மீள திறவோன் புறப்பாடு.
தீந்தமிழ் நிலத்தில் திக்கற்றோர்
இன்னல் தீர்க்க வந்தான் வையவன்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அவனைக் கண்டால் சொல்லு

நந்தவனத்தின் பூக்களே
சுகந்தம் சுமக்கின்ற.

தென்றலே வெண்புறாவே.
அன்னமே கடலலையே

ஏங்கித் தவிக்கும்
காரிகை இங்கே.

மணம் வீசும்
மல்லிகையைச் சூடி

இதயத்தில்
ஆயிரம் தாபங்களை ஏந்தி.

கைவளை கழன்றிடும்
மெல்லியலாள் படபடப்புடனே.

செக்கச் சிவந்த கன்னங்களில்
சோகமாய்.

தலைவனைத் தேடுகிறேனே
தூது சொல்லுங்களேன்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# நிலவின் ஒளியில்



நிலவின் ஒளி இருட்டில் பிரகாசிக்க
என்னவளின் முகமும் அழகு சேர்ந்தது
இருவரும் கடற்கரை ஓரத்தில் கைக்கோர்த்த
நொடியில் பேசி மகிழ்ந்த தருணங்கள்
காற்றோடு காற்றாய் கலந்த நிமிடங்கள்
இரவு வானில் நட்சத்திரமும் பிரகாசிக்க
கடல் அலையில் கால் நனைக்க
அந்த அழகிய இராப்பொழுதை என்னவென்பது
காதலர்கள் கனவுக்கு ஏற்ற இடமோ
கண்ணும் கண்ணும் பேச முத்துக்கள்
சிதற சிந்திய புன்னகையை அள்ள
முடியாமல் கற்பனையில் வலம் வந்த
நான் அவளை நோக்க வெட்கத்தில்
நாணம் கொண்டு கால் கொலுசில்
என்னை கடந்து சென்ற
இந்த நிமிடம் வரை என்னால் மறக்காது

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# குறட்கூ

அழகாய் ஆட்சி புரியும் அரிசிமாவு
அங்கங்கே மிளிரும் சிறுதானிய மாவு
எதனோடு இணைந்தாலும் தன் குணம் மாறா கடலைமாவு
சுவைமிகு தங்கநிற கடலையெண்ணெய்யும் நெய்யும்



சுவையும் மணமும் கூட்ட ஓமமும் காயமும்
கரும்பு வெல்லத்துடன் தேவைக்கேற்ப உப்பு காரமென
பண்டிகை என்றாலே பலகாரம் செய்திட
தண்டிகை ஏறாமல் பலதூரம் கடந்திடும்

தைலம் மறந்த அம்மாவின் கால்வலியும்
வயது மறந்த வாகான முன்தயாரிப்பும்
நீர்க்க விழுந்து பொரித்து எடுக்கையில்
முத்து முத்தாக பூத்து வரும் பூந்தி

சர்க்கரைப் பாகில் குழைந்தும்
மிளகாய்த் தூளில் விரைத்தும்
மொத்தமாக கைக்கோர்த்து
வெந்தெடுத்தவுடன்

இலேசான தட்டலில்
நொறுங்கி தனித்திருக்கும் ஓமப்பொடி
வறுத்தாலும் நிறம் மாறாமல்
கெட்டிப்படும் வறு கடலை

பொரித்தவுடன் நிறம் கூடி
தனிச்சுவை கூட்டும் நிலக்கடலை
அலங்காரம் கூட்ட கரகரப்பாய் பொரித்த
கருவேப்பிலை முந்திரி பாதாம்

சிறிதே காரம் பூசிக் கொண்டாலும்
கடிபட இனிக்கும் உலர்திராட்சை
இணைந்தே சுவைக்கூட்டும் பல்சுவை கலவை பலகாரம்

அடித்து பிசைந்து நறுக்கி பொரிக்க
மென்மையும் கடினமுமாய் ஈரட்டி
பதமும் பக்குவம் சேர்த்து செய்த
அரச பலகாரமாய் அதிரசம்

உரலில் இட்டு பிழிந்தாலும் பிரியாமல்
உடன் நிற்கும் தேன்குழல்
அதிகாலை மணம்கூட்ட மெதுவடையும் சுழியனும்
பிள்ளைகளுக்கென இறுதியாக கிளறிய பால்கோவாவுடன்

பதமான பலகாரங்கள் சீராக செமிக்க இலேகியமென
அனைத்தும் பரிமாறிய நீள்வாழை இலையில்
அன்புநிறை கைப்பக்குவம் அக்கறையுடன் நிறைந்திட
என்றோ மறைந்த அம்மாவின் புன்னகை

எதேச்சையாக தெரிந்த கண்ணாடி பிம்பத்தில்!



கவிஞர் மா. சாந்தாதேவி, சென்னை

# சுவரொட்டி

சாலைகளில் அநாதையாக நிற்கும்
சுவர்களின் நிர்வாணம் மறைக்க
பயன்படும் வண்ணங்களின் கலவை

அரசியல் தொடங்கி ஆன்மிகம்
வரை பொய்களின் பாதயாத்திரை
சாலையோரத்தில்

கால்நடைகளின் மூன்று வேளை
தினசரி காகித உணவு

பலநேரங்களில் சாலையோர
மனிதர்களின் குளிர்கால போர்வை

ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும்
வார்த்தைப்போர் நடத்தும்
தெருவோர மேடை



அன்றைய திரைப்படங்களின்
வண்ண முகவரிகள் தெருவோர
நிழல்களாய்

இரவில் முளைத்து பகலில்
உயிர் துறக்கும்
காகித சுவரொட்டிகள்

என்றும் மனிதனின்
தோழமைகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தன்னார்வ உடல் தானம்

இம்மண்ணில் பிறந்தேன்
நல் வாழ்க்கை வாழ்ந்தேன்
பிறர் போல் இன்றி
உடல் தானம் செய்தேன்.
அதில் நான் கண்டது



அலங்காரம் கலைந்து ஆடையின்றி இருந்தும்
மிகுந்த கண்ணியம் கிடைத்ததே
சந்தனமாய் பதமியம் பூசிக்கொள்ள
ராஜ மரியாதையோடு உறங்க சென்றேன்

இமை திறந்து பார்க்கவே
ஐயம் கொண்டேன் - பலர் தோற்றத்தில்
சில வினாடிகளில் மறைந்ததே (ஐயம்)
ஆர்வமுள்ள கண்களை பார்த்து

பல வெட்டுகாயங்களோடு துகில்
உரிந்து கிடந்தேன்
பாரமான என் இதயம்
கனம் இழந்து நின்றதே -அவர்கள் கையில்

கையின் நரம்புகள் யாழ்தந்தி போல் இருக்கவே
அதில் அழகிய பாடல் இயற்றினரோ
கர்நாடக சங்கீதமாம்
நான் ஒன்றும் அறியேன்

உணர்வையாளும் மனதை தேடிப்பார்த்தேன்
பின் தெரிந்தது அது அறிவின் தந்திரமாம்
சில கணம் கவலையில் சுற்றினேன்
பறந்து போனதே அவர்களின் ஈடுபாட்டால்

என் மூச்சு நின்ற போதிலும்
பிறர் சுவாசிக்க உதவினேன்
நான் குருடானாலும்
என் பார்வையின் உயிர் இப்புவியில்

நான் அன்றே மறைந்தேன்
என்னால் கற்றவர்
பலரைக் காக்க இவ்வுலகில்

உடல் தானம் செய்வோம்
உயிரினம் காப்போம்

கவிஞர் பொ. வளம், சிதம்பரம்

# குறுங்கவிதை

கொடும் வெயிலும்
கொட்டும் மழையாகும்
எங்கள் கரிசல் காட்டில்.

எங்கூர் வானத்து
மேகங்கள் அடிக்கடி
முட்டுவதுண்டு ஆனால்
மழையைத்தான் கொட்டுவதில்லை.

இரவு நேர சாலைகளில்
எமதர்மன் நடமாட்டம்
எருமைகள்.

ஒரு புத்தாடைக்காக
வருடப் புத்தாண்டை
காத்திருக்கிறது
எங்கள் வறுமை.

கடந்து போன பின்னே
சிரிப்பதும்
கவலை மறந்த பின்னே
அழுவதும்
வாடிக்கையான வழக்கம்.

இவன் தந்தையின்
வியர்வை வாசத்திற்கு
நிகராக இல்லை
ஒரு வாசனைத் திரவியம்.

கைகளுக்குள் ஏன்
இத்தனை வேறுபாடு
ஏன் ஓர் இழிவுப் பார்வை
உன் அழுக்கை
அகற்றும் இடக்கை மீது.



நான் உயிருடன் தான்
இருக்கிறேன்
ஆதாரம் அவ்வப்போது
சிந்திக்கிறேன்.

சாக்காடு சபதம் இங்கு
வேக்காடு தாங்காமல்
பூக்காட்டுப் புயலைப் போல
பூமியெங்கும் வீசுமோ?

மண்ணில் புதையலைத்
தேடியவன்.
பின்னாளில் மண்ணுக்குள்
தேடுகிறார்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# குறுங்கவிதை

போவதாய் இருந்ததுதான் போனது
சொல்லாமல் போனது
பொறுமை இல்லாமல் போனது
ஏற்க மனம் இல்லாமல் போனது
போனது இளமை



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை


# ஒளி காட்டும் வழி

குட்டிடும்போதெல்லாம் 'பட்'டெனப் பொறியுடனே
பதிக்கிறதே தன்னெதிர்ப்பை பொட்டுப் பட்டாசு!

ஒருமுகப்படுத்தி உன் திறமை வெளிப்படுத்த
உயர்வது உறுதியென உணர்த்தியது கலசஒளி!

தரையில் சுழன்று தனைச்சுற்றி ஒளிபரப்பி
உடலுழைப்பின் அவசியத்தை உணர்த்தியது சக்கரம்!

தன்னுடல் தீய்ந்தாலும் புன்முறுவல் ஒளிசிந்தி
தன்னலம் பாராமை தனையுரைத்தது மத்தாப்பு!



ஒற்றுமையைக் குலைத்திடவே பற்ற வைப்பவரை
வெடித்து ஒளிகாட்டி விரட்டின சரவெடிகள்!

நற்றிறம் போதாது 'நா'காத்தல் வேண்டுமென
வெடிக்காமல் ஒளிசிந்தி வீழ்ந்ததொரு பட்டாசு!

சேரா இடம் சேர்ந்து சீரழிந்த பின்னாலே
சுட்டபின்பு பொறிதட்ட கருகிடும் சுருள்கேப்பு!

தடைகளைத் தகர்த்தெறிந்து தாமுயர்ந்தோர் தனைப்பார்த்து
வண்ண ஒளியிறைத்து வாழ்த்தியது வானவெடி!

பட்டாசின் வெடிஒளியும் பலவழிகள் காட்டுமென
இட்ட கவிதைஇது! இன்புற்று மகிழ்வோமே!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# வேண்டுதல்கள்



மழையே! வா மழையே!
மண்ணை உழுது
விதையும் விதைக்கணும்
விளையும் பயிரை
அறுவடை செய்தே
பணமும் சேர்க்கணும்
மழையே! வா மழையே!
உழவனின் வேண்டுதல்

மண்பாண்டம் செய்தேன்
காய்ந்திட வேணும்
வெயிலே! வா வெயிலே!
மண்பாண்டம் விற்றே
திருவிழா கொண்டாட வேணும்
வெயிலே! வா வெயிலே!
குயவனின் வேண்டுதல்

மழையே! வாராதிரு மழையே!
வாங்கி வந்த துணியெல்லாம்
விற்று பணமாக்க வேணும்
தீபாவளியை நாங்களும்
கொண்டாட வேணும்
மழையே! வாராதிரு மழையே!
சாலையோர வியாபாரி வேண்டுதல்

காற்றே! பெருங்காற்றே!
புயலாய் வீசாதிரு
பொரியும் விற்கணும்
பணமும் பார்க்கணும்
வீட்டுல அடுப்பெரியணும்
காற்றே! பெருங்காற்றாய்
வீசாதிரு காற்றே
பொரி வியாபாரியின் வேண்டுதல்

எல்லோருக்கும் நல்லா
வியாபாரம் நடக்கட்டும்
பணத்தை சம்பாரிச்சு
இங்கே வந்து கொட்டட்டும்
டாஸ்மாக் விற்பனையாளன் வேண்டுதல்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கற்பனை மெய்யோ? பொய்யோ?

அன்னைத் தமிழின் அற்புத அணிகலன்களுள்
அறிஞர் அண்ணாவிற்கு மிகப்பிடித்தவொரு அணிகலன்;
கலிங்கவெற்றியைப் பாடிடும் கலிங்கத்துப் பரணியெனும்
கவின்மிகு சிற்றிலக்கியமது கற்பனையின் ஊற்றே!



காடுபாடியது என்றொருபகுதி காட்டும் கற்பனையிது
கண்கொண்டு வாசித்திடவுங்கள் மனக்கண்ணில் கண்டுகளித்திட
கவிஞன் யானுமும்மை அன்புடன் வேண்டுவேன்!
காளியின் காட்டில் வெயிலின் கொடுமை;
குடிக்க நீரின்றி துயருறும் மானொன்று,
அருகிலிருந்த செந்நாயொன்று வெயிலின் கொடுமையை
ஆற்றவியலாது தவிக்கும்வேளை அதன்நாவில் இருந்துவடிந்த
எச்சிலைநக்கிட வதற்கனுமதித்து செந்நாயன்பு செலுத்தியதென
நேரில்கண்ட நிகழ்வுபோல் செயங்கொண்டார் பாடக்கண்டு
நிஜமல்லவது வெற்றுக்கற்பனையென அடியேன் எண்ணியதுண்டு!

சென்னைவாழ் இணையர் இருவர்தாம்பேணும் இல்லறத்தின்
சிறந்த செயலாய்ப் பசியால் தவிக்கும்
கிளிகள்புறாக்கள் போன்ற பற்பல உயிரினங்களும்
கிள்ளும்பசியைக் கொன்றிட அவைகளுக்கு மொட்டைமாடியில்
விருந்தளிப்பதைப் பழக்கமாக்க பரவியதவர்கள் புகழ்பாரினிலே!

அவ்விதமவர்தம் வாழ்க்கையை பறவைவிருந்தின ரோடுகழிக்க
அந்நியர்களும் அவர்களுக்கு அவர்தம்சேவை யிலுதவினரே!
அங்கொரு குரங்கொருநாள் விருந்தாய்வந்து பழக்கத்தால்
மீண்டுமொருமுறை வந்தபோது பறவைக்குஞ்சொன் றைக்கொணர்ந்து
மென்றுகூழாக்கிய உணவையக் குஞ்சிற்குவூட்டி அறம்செய்ததே!

அன்பென்பது மனிதர்பலரிடம் வணிகப்பொருளாய் இருக்க
ஏனைய உயிர்களிடமோ அதுவுயிர்ப்புடன் இருக்கிறது!
ஏற்றமிகு கலிங்கத்துப் பரணிகாட்டிய செந்நாயன்பு
வெற்றுக்கற்பனை அல்லவது வாழ்வதெப்படியென காட்டுமோர்
வாழ்வியல் கற்பனையென உணர்ந்ததாலே வாழ்த்துவேன்
அடியேன் அன்பு காட்டும் நெஞ்சங்களையே!

**கலிங்கத்துப் பரணி:**

-------------------------------------

தீயின் வாயின்நீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து வந்துசெந்
நாயின் வாயின்நீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று

தினமும் ஆலயம் தவறாமல் சென்று
ஆண்டவனைத் தியானித்து அகம் மகிழ்ந்திடு

உள்ளத்தை அரசோட்சும் அச்சம் தொலைந்து
கவலைகள் காற்றில் பஞ்சாய்ப் பறந்திடும்

நெஞ்சத்து வேதனைகள் கிள்ளி யெறிந்து
நிழலாய் நிசமாய் ஆறுதல் கிடைத்திடும்

பஞ்சத்தில் பட்டினி பரிதவிப்புச் செய்தாலும்
பக்குவம் காத்தே பவனிவரக் கற்றுத்தரும்

அக்கம் பக்கம் அடுத்தவரை அறிந்து
சுகதுக்கம் விசாரித்து உறவுகளைப் பெருக்கிடும்

நேரந் தவறாமைப் பாடம் புகட்டி
நேர்த்தி குழையாமல் வாழச் செய்திடும்

உலகாசை மாயை உளத்திலிருந்து களைந்து
உளத்திருப்தியுடன் உயிர் வாழச் செய்திடும்

நாட்களின் நெருடலில் நானிலத்தில் தலைகுனியாது
நல்வாழ்வை நல்கியே நன்னயம் செய்திடும்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# உலகின் தலைசிறந்த சொல்

இந்த உலகம் எங்கும் வியாபித்திருக்கும்
உறவுகளுக்குள் இனிமை சேர்த்திடும்!
சுயநலமாய் சிந்திக்காது
கட்டுண்டவர்களால் விடுபட முடியாது
தன்னலமில்லாமல் சேவை புரிந்திடும்!
கண்ணீரில் கரைந்து விடும்!
வான்கொடையாய் மண்ணுக்குள் இறங்கும்
மழைநீர் போல் தூய்மையானது!
கள்ளமில்லா மழலையின் சிரிப்பாய்
காண்போருக்குக் கடத்திடும்!
மன்னிக்கின்ற தன்மை உண்டு
எதிர்பார்ப்பின்றி, பாரபட்சம் பார்க்காமல்
பிரபஞ்சத்தின் மூச்சுக்காற்றாய் இவ்வுலகமெங்கும்
நிறைந்திருக்கும்!
அன்பு என்ற ஒற்றைத் தவிர
வேறெந்த சொல் அவனியில்
உயர்ந்த சொல்லாய் இருந்திட முடியும்?



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# ஆண் பூக்களும் பெண் பூக்களும்

உன் பூ விரலில் தொட்டு
உன் பூங்கூந்தலில் நீ சூடிய
ஆண் பூக்கள் அனைத்தும்
உன் மேல் ஆசைப்பட்டது
பெண் பூக்கள் அனைத்தும்
உன் பேரழகை கண்டு பேராசைப்பட்டு
பெருமூச்சு விட்டது!



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# மகிழ்ச்சி தீபாவளி

தீபாவளி திருநாள் திகட்டாத பெருநாள்
இருப்பவர் இல்லாதவர் கொண்டாடும் இனியநாள்

புத்தாடை பட்டாசு பலகார இனிப்புகளுடன்
மனம் எல்லாம் கொள்ளை கொள்ளும் மகத்தான மகிழ்வு நாள்.

இருப்பவருக்கு பெருவிழா, இல்லாதவர்க்கு சிறுவிழா
ஆனாலும் குழந்தைகள் கவலைகள் மறந்த நாள்.

வலியவர்கள் ஏடிஎம் முன்.. எளியவர்கள் அடகு கடை முன்
கஷ்டங்கள் துக்கங்கள் ஆயிரம் இருந்தாலும்
பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கு ஈடு இணை எதுவும் இல்லை.



விடிய விடிய பட்டாசு பூ பூவா மத்தாப்பு
தூக்கம் மறந்திட்ட மகிழ்ச்சியின் உச்ச நாள்.
அதிகாலை குளியல் ஆறு மணிக்கே பலகாரம்இனிப்புகள்.

புத்தாடை அணிந்து கொண்டு ராஜா போல நடை போடும்
குழந்தைகளின் அழகுக்கு ஈடு இணை எதுவும் இல்லை.

காண கண் கோடி இருந்தாலும் பத்தாது
தாத்தா பாட்டி காலில் விழுந்து ஆசீர்வாதம்
ஆசியோடு காசு வாங்கி மகிழும் குழந்தைகள்.

இந்த மகிழ்ச்சிக்கு கோடி ரூபாய் லாட்டரியில் விழுந்தாலும்
ஈடாகாது குழந்தைகளுக்கு.

அப்பப்பா!
தீபாவளி பண்டிகை யென்று நினைத்தாலே நடுங்குது
பொருளாதார நெருக்கடி நெஞ்சை அழுத்துது.

அடுத்த திருநாளுக்குள் அடையுமோ கடன் என்று தவிக்குது மனசு.
ஆனாலும் குழந்தைகள் குடும்பத்தின் மகிழ்ச்சியால்
மனம் எல்லாம் சொர்க்கத்தின் வாசலில் நிற்பதாய் உணர்த்தும்.

குடும்பத்து தலைவனாய் குதூ கலிக்கும் மனசுக்கு
இதைவிட சந்தோஷம் உலகத்தில் இல்லையே.

திருநாள்கள் வந்திட்டும் மகிழ்ச்சியை தந்திடட்டும்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு



அகர முதல

# ஆத்திசூடி

1. அன்பு வழியில் நடந்திடு
அறியாமையை அகற்றிடு.

2. ஆணவமில்லாமல் பழகிடு
ஆசான்களை வணங்கிடு.

3. இயன்றவரை உதவிடு
இயலாதவர்க்கு கொடுத்திடு.

4. ஈகை குணத்தை பெருக்கிடு
ஈன்றவள் நெஞ்சை நிறைத்திடு.

5. உறவுகளோடு வாழந்திடு
உரிமையோடு பணிந்திடு.

6. ஊக்கம் மனதில் விதைத்திடு
ஊர் போற்றும் மேதையாகிடு.

7. எண்ணிய கருமம் முடித்திடு
எரிமலையென கொதித்திடு.

8. ஏழ்மையில் நேர்மை கடைபிடித்திடு
ஏற்றத்தாழ்வை ஒழித்திடு.

9. ஐம்புலன்களை அடக்கிடு
ஐய்யமின்றி வாழ்வில் சிறந்திடு

10. ஒன்றுமை மனதில் நிறுத்திடு
ஒன்று கூடி மகிழ்ந்திடு.

11. ஓயாமல் என்றும் உழைத்திடு
ஓவியமாய் திகழ்ந்திடு.

12. ஔவை தமிழை படித்திடு
ஔவியம் பேசாது கடந்திடு.

13. எஃகு போல் இருந்திடு
அஃதே வழியில் நடந்திடு.




கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# வதனம்




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## நாச்சியார்தம் எட்டாவது திருமொழி:
## மேகவிடு தூது 1-10 (6-10) 005




மாண்கோதை நாச்சியார்தம் எட்டாவது திருமொழியில்
ஆறுமுதல் பத்துமுடிய காணைந்து பாசுரங்களில்
ஆண்டாள்தன் நலமழித்த எம்பெருமான் சேர்ப்பித்த
துன்பநோயை தெரிவிக்க தூதாக மேகத்தை
சென்றிடவே வேண்டுகிறாள்! உட்புகுந்து மெலிவித்த
தீம்பிழைத்த பாழ்செய்கை சாற்றிடவே கோருகிறாள்!
ஏழாவது பாசுரத்தே அவனணைப்பு கிட்டிலதேல்
தன்னுயிர்தான் நில்லாது என்றுமேகம் உரைத்திடவே
சாற்றுகிறாள் ! கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழிய
புகுந்தொருநாள் எம்பெருமான் தங்கினால்தான் தன்னாவி
நிற்குமென ஆண்டாள்தான் கழறுகின்றாள்! எட்டாவது
பாசுரத்தே வாராமல் கூடாமல் பேசாமல்
துன்புறுத்தல் தகாதெனவே மேகமுரைக்க பெருமானுக்கு
பிராட்டிதானும் சாற்றுகிறாள்! எருக்கிலைபோல் வீழாமுன்
பெருமானார் தம்வாசகம் தந்தருள விருப்புரைத்தாள்!
ஒன்பதாவது பாசுரத்தே எம்பெருமான் சித்ரவதை
கோதைபால் கூடிடுமேல் பழிப்புக்கே ஆளாவான்
என்றுரைக்க கோதையவள் எச்சரிக்கை கூட்டுகின்றாள்!
அவமதிப்பு சூழுமென மால்தனக்கை மால்தனக்கு
முன்னுணர்த்தல் காட்டுகின்றாள்! பத்தாவது பாசுரத்தே
பலனுரைத்தாள் கோதைமகள்! வேங்கடத்தான் ஆர்வத்தராய்
ஐயிரண்டும் மனத்திருத்தி ஓதவல்லார் கைங்கர்யம்
ஆற்றுவோராய் அடியவராய் மிளிர்வாரென கோதையவள்
சாற்றிட்டாள்! எட்டாவது திருமொழிதான் முற்றிற்று!
ஒன்பதாவது திருமொழியாய் நற்சிந்துரச் செம்பொடியே
திருமாலிருஞ் சோலையழ கடனுதவ கரனுபவமே
பாசுரங்கள் பத்தளவில் காதலதே பக்தியாக
கோதைதமிழ் துலங்கிடுமே! பக்தியிலே உயர்ந்தாளை
பரவசத்தில் உய்த்தாளை நல்மங்களா சாசனமும்
செய்தாளை கொண்டாடிடல் நம்கடனே! கோதைதமிழ்
துய்த்துமகிழ் கொள்வோமே! பக்தியினில் திளைப்போமே!

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# தீப ஒளி



உலகுக்கு எல்லாம் ஒரே விளக்கு சூரியன்
உலகுக்கு எல்லாம் ஒரே துப்பட்டி ஆகாயம்
உலகெல்லாம் கொண்டாடும் திருநாள் தீபஒளி திருநாள்
இருளை அகற்றி ஒளி தரும் நாள்

மனதில் இருக்கும் தீய சக்தியை விரட்டி
மதி என்னும் ஒளியை தரும் நல்ல நாள்.
அதிகாலை கங்கா ஸ்நானம்.
அதன் பின் புத்தாடை, வீட்டையே அலங்கரிக்கும்
மின்சார விளக்குகளும் அகல் விளக்குகளும் ஜொலிக்கின்றன
பின்பு இனிப்பு, பட்டாசுகள்.
இவை எல்லாம் காலம் காலமாக நாம் கொண்டாடுபவையே!
வசதி உள்ளவர்கள் அதிகபட்சமாக தங்கம் வைரம் என்று
பணத்தை வாரி இறைத்து கொண்டாடி மகிழ்கிறார்கள்.
வசதி இல்லாதவர்கள் எளிமையாகவே கொண்டாடி மகிழ்கிறார்கள்.
உறவினர்கள் ஒன்று கூடி கொண்டாடி மகிழ்கிறார்கள்.
எளியோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்தோம் என்றால்
இறைவனே நம் இல்லமே நாடி வருவானே!
நம் இல்லமும், உள்ளமும் மகிழ்ச்சி உடன் இருக்க
இத்திருநாளில் தான தர்மங்கள் பல செய்து மகிழ்வோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காதலில் கருவறை ஞாபகம்



பள்ளியறை படுக்கையில்
காதலனின் மார்மீது
காதலியின் கால் கிடக்கையில்
பார்க்கின்ற பார்வையெல்லாம்
பருந்து பார்வை போல்
பரவசமாய் பற்பல பேச்சு பேசி
பேணும் நல்லொழுக்கத்தை
ஒன்றுமில்லாமல் ஒழித்தது போல
அவனை அவள் அடக்கிறாள் என்றும்
அவள் அடங்கா பிடாரி என்றும்
அவள் மீது அகங்கார வார்த்தைகளை கொட்டியது போதும்
கூர்ந்து கேள் மனமே
எந்த காதலனும் தன் காதலியின்
கால்கள் தன் மார்மீது இருக்கும் போது
அவன் நினைவுக்கு வருவதென்னவோ
தான் சிறுவயதில் உறங்கையில்
தன் தாயின் கைகள் தன் நெஞ்சோடு அணைத்திருக்கும்
ஞாபகமே

கவிஞர் பி. வுட்ஷன் முல்லைத்தீவு (இலங்கை)

# நூலகம்

ஆலெனப் படர்ந்து நிற்க
அறிவெனும் ஊற்றாய் மாறி
காலமும் வாழ்த்து கின்ற
கருத்தினில் சிறக்க வைக்கும்
பாலமாய் இணைந்து வாழ்வில்
பண்புடன் படிப்பைக் கூட்டி
நூலகம் என்னும் கோயில்
நுட்பமாய் சிந்தை தீட்டும் !

சாலவும் சிறப்ப தற்கே
சான்றுகள் நூறு காட்டி
நாலடி குறளும் சேர்த்து
நானிலம் வாழ வைக்கும்
வாலறி இறைவன் தந்த
வான்புகழ் மறைகள் யாவும்
நூலெனும் ஏணி யாகி
நூலகம் வழங்கு மன்றோ !



இலங்கிடும் வாழ்வு தன்னில்
இசையுறும் வீணை மீட்டி
துலங்கிடும் சிறப்பை எல்லாம்
தொடர்ந்துமே பரிசாய்க் கூட்டும்
பலதிறன் சான்ற பெரியோர்
படித்ததோர் நூல கங்கள்
நிலத்திடை வாழ்வு வேண்டின்
நிறைவுடன் படிப்பீர் இன்றே !

பாவலர் சா. சரவணன், செய்யாறு

# பறி போனதா நெஞ்சம்

நூல் அறிமுகம் கவிதை

பறி போனதா நெஞ்சம்!? " (புதுக்கவிதைகளின்பூங்கொத்து) என்னும் கவிதை நூலைத் தேடிய அன்பு வாசகருக்கு, என் கனவுகளைத் தேடிய நேசத்திற்கு, "ஒரு கவிதை என்பது எழுச்சி தருவது. ஒரு கவிதை என்பது மாற்றம் தருவது, ஒரு கவிதை என்பது சுகந்தம் தருவது எனக் கவிதை என்றால் என்னவென்று ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்றாய் சொல்லி விட்டுப் போக, இக்கவிதைகளை வாசித்து விட்டு எனக்கு கடும் விமர்சனம் தந்தாலும்

இல்லையெனில் எனக்கு முதுகில் ஒரு தட்டு தந்தாலும் அல்லது எனக்கு சாமரம் வீசும் வாழ்த்து தந்திடினும், இல்லையெனில் தலை மீது வீங்குமளவிற்கு குட்டுக் கொடுத்தாலும், கண்டிப்பாக மிகக்கண்டிப்பாக மகிழ்வேன்.




கவிமலர் ஆர். பி. வசந்த நிலா

# சரக்கொன்றை நிழற்சாலை

## நூல் அறிமுகம் ஹைக்கூ

**நூலாசிரியர் : ஷர்ஜிலா பர்வின் யாகூப்**
**பக்கம் : 110; வெளியீடு : படைப்பு பதிப்பகம்**
**விலை : 100. ; நூலை பெற : 8825868689, 7338897788.**

ஒரு கோடை மழைக்கு ஏங்குவது போல ஒரு மொட்டவிழும் மலரின் வாசத்திற்கு ஏங்குவது போல ஒரு நல்ல ஹைக்கூ கவிதைகள் படிக்க ஏங்குவதும் காத்திருத்தலும் ஒரு சுகம்தானே. அப்படியான கவிதை தொகுப்புதான் இந்த "சரக்கொன்றை நிழற்சாலை " யும் ஒரு பூஞ்சோலையில் பல தேனீக்கள் ஒன்று கூடுவது போல ஒரு புத்தகத்தில் பல ஹைக்கூ கவிதைகளை நிரப்பி இருக்கிறார் கவிஞர்.




ஈக்களும் தேனீக்களும் பூச்சி வகையை சேர்ந்எல்லா ஈக்களுமே தேனீக்கள் ஆகிவிடுவதில்லை. ஈக்கள் வெறும் இனிப்பை உண்ணும் அதனால் எந்த பயனுமில்லை. ஆனால் தேனீக்கள் அப்படியில்லை தேனீயினால் தான் மலரில் மகரந்த சேர்க்கையே நடைபெறுகிறது. தேனீக்கள் இல்லையேல் இந்த உலகமே இல்லை; கவிதைகள் இல்லையேல் மொழிகள் அழிந்துவிடும். ஒவ்வொரு புத்தகத்தை வாசிக்கும் போதும் ஒரு மனஅமைதியும் நிறைவும் கிடைக்குமென்றால் புத்தகத்தை வாசிப்பதில் எந்த தவறும் இல்லை. தேன் சுவையான கவிதைகளை நாமும் சுவைப்போம்.

யாருமற்ற படகில் காற்று ஆழ்ந்திருப்பதும் படகை அசைத்து அசைத்து விளையாடுவதும் காற்றுக்கு என்ன புதிதா காட்சியை விரிவுபடுத்தி பார்த்தால் அது மழைக் காற்றாக இருக்கிறது என்ன ஒரு மனதை குளிர்விக்கின்ற கவிதையிது.

**வெற்றுப்படகை**
**அசைத்துவிட்டு அக்கரையேறியது**
**மழைக் காற்று**

ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம், நூல் விமர்சகர், எழுத்தாளர்

விபத்தில் காயமடைந்ததற்கு தானே முதலுதவி சிகிச்சை அதென்ன நதிக்கு முதலுதவி சிகிச்சை வாருங்கள் பார்ப்போம்.

அடுக்கிய மணல் மூட்டை
வெள்ளத்தில் தொலைந்தநதிக்கு
முதலுதவி சிகிச்சை

காட்டின் சமணத்துறவி யாரென்று உங்களுக்கு தெரியுமா? காட்டை வளர்ப்பவர்களா இல்லை அழிப்பவர்களா மரங்களை நடுபவர்களா? கவிதையில் அருமையாக சொல்கிறார் கவிஞர்.

சருகுகளை கூட்டியபடி நடக்கும்
காட்டின் சமணத்துறவி
மயில்

வெள்ளம் வடிந்த வீதி
வீட்டுக் கூரையின் மேல்
தரைதட்டி நிற்கும் படகு

படகை நிறுத்தி வைக்க வேறு இடமில்லை அதனால் தான் வீட்டுக்கூறையில் நிறுத்தி சென்றது புயல் ஓய்ந்த மழை.

கடற்கரையில் வழக்கறிஞர்கள் ஒன்று கூடினால் கும்மாளம்தான். இவர்கள் யாரிடமும் வாதாடுவதில்லை லஞ்சம் வாங்குவதில்லை நீதிக்கு புறம்பாக எதையும் செய்வதில்லை ஆனாலும் கருப்பு மேலங்கியை கழட்டுவதில்லை.

கருப்பு மேலங்கி
கழட்டாத வழக்கறிஞர்களா?
கடற்கரை பென்குவின்கள்.

நமகெல்லாம் ஐந்தறிவா? ஆறறிவா? நான் கேட்கவில்லை கவிஞர் கேட்கிறார்.

ஐந்தறிவா? ஆறறிவா?
பிஸ்கட்டை தண்ணீரில் நனைத்து
முழுங்கும் காக்கை

ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம், நூல் விமர்சகர், எழுத்தாளர்

வானம் ஒரு போதிமரம் நாளும் எனக்கது சேதி தரும் என்ற பாடல் வரிகளை போல கவிஞருக்கும் வானம் ஞானம் தந்திருக்கிறது.

மரக்கன்று நடுகிறேன்
தூறத் தொடங்கியது
வானம்

சிறகுகள் இல்லை அதானால் என்ன காற்றை பிடித்துக்கொண்டு நானும் பறப்பேன் என்று கவிதைகள் மூலம் கவிஞர் நமக்கு நம்பிக்கையை விதைக்கிறார்.

சிறகுகள் இல்லை
காற்றடிக்கும் போதெல்லாம்
மெல்ல மேலெழும் சருகு

பூக்களை உதிர்க்கும் ஒரு கோடையில்
மரத்தின் நிழலில் நீங்கள் அமர்ந்ததுண்டா
ஒரு நத்தையை போல பூக்களின் வாசம் பிடித்து நகர்ந்ததுண்டா
உதிர்ந்த பூக்களின் மென்மையான இதழின் மீது ஒரு எறும்பை போல உறங்கியதுண்டா. இந்த கவிதையை வாசித்துவிட்டால் இனி நீங்களும் அந்த சரக்கொன்றை நிழற்சாலையில் பயணிப்பீர்கள்.

நத்தையாகிறேன்
நிழலெல்லாம் பூக்களுடன்
சரக்கொன்றை நிழற்சாலை

கவிஞரின் நிழற்சாலையில் நானும் சிறிது நேரம் ஓய்வெடுத்தது போல நீங்களும் நூலை வாங்கி வாசித்து சிறிது ஓய்வெடுத்து செல்லவும்.

ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம், நூல் விமர்சகர், எழுத்தாளர்

## கட்டுரை

### பிறப்பு வளர்ப்பு குடும்பம்



தமிழ் நாடு மாநிலம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு, தாமரங்கோட்டை என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக 13.04.1930-ல் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். கணபதிசுந்தரம் என்கிற மூத்த சகோதரரும் வேதநாயகி என்கிற இளைய சகோதரியும் உள்ளனர். பள்ளிப்படிப்பு மட்டுமே கொள்ள முடிந்த கல்யாணசுந்தரம் சுயமரியாதை இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவம்மாள். 1959-ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10.1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

### எழுத்தாற்றல்

பத்தொன்பதாவது வயதிலேயே கவிபுனைவதில் அதிக ஆர்வம் காட்டியவர். இவருடைய பாடல்கள் கிராமியப் பண்ணைத் தழுவியவை. பாடல்களில் உருவங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டியவர். இருக்கும் குறைகளையும் வளரவேண்டிய நிறைகளையும் சுட்டிக் காட்டியவர். திரையுலகில் பாட்டாளி மக்களின் ஆசைகளையும், ஆவேசத்தையும், அந்தரங்க சக்தியுடன் பாடல்களாக இசைத்தார். இவர் இயற்றி வந்த கருத்துச் செறிவும் கற்பனை உரமும் படைத்த பல பாடல்களை ஜனசக்தி பத்திரிகை வெளியிட்டு வந்தது. 1954ஆம் ஆண்டு படித்த பெண் திரைப்படத்திற்காக முதல் பாடலை இயற்றி அந்தத் துறையில் அழுத்தமான முத்திரை பதித்தார்.

அ வில்சன் இதழாசிரியர்


கட்டுரை

### பொதுவுடைமை ஆர்வம்

இளம் பிராயத்திலேயே விவசாய சங்கத்திலும், பொதுவுடைமைக் கட்சி(கம்யூனிஸ்ட் கட்சி)யிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். தான் பின்பற்றி வந்த கட்சியின் இலட்சியத்தை உயரத்தில் பறக்கும் வகையில் கலை வளர்ப்பதில் சலியாது ஈடுபட்டார்.நாடகக் கலையில் ஆர்வமும், விவசாய இயக்கத்தின் பால் அசைக்கமுடியாத பற்றும் கொண்டிருந்தார். தஞ்சையைச் சேர்ந்த வீரத் தியாகிகள் சிவராமன், இரணியன் ஆகியோருடன் சேர்ந்து விவசாய இயக்கத்தைக் கட்டி வளர்க்க தீவிரமாகப் பங்கெடுத்தார்.

தமது 29 ஆண்டு வாழ்வில் விவசாயி, மாடு மேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர், என 17 வகைத் தொழில்களில் ஈடுபட்டவர். இவருக்கு இருந்த நடிப்பாசையின் காரணமாக ‘சக்தி நாடக சபா’வில் இணைந்தார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமோ நடிப்பை விட்டுவிட்டுப் பாடல் எழுதும் கலையைக் கற்றுக்கொள்ள புதுச்சேரி சென்று ‘புரட்சிக்கவி’ பாரதிதாசனிடம் உதவியாளராகச் சேர்ந்துவிட்டு இறுதியில் கவிஞராக உருவானார்.

### மறைவு




பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திருமணம் முடிந்த ஐந்து வருடங்களில் தனது 29-வது அகவையில் 1959 அக்டோபர் 8 ஆம் நாள் காலமானார். இவர் இறக்கும் போது இவருக்கு 5 மாத குழந்தை இருந்தது. இவரது மறைவுக்கு கலைஞர் மு. கருணாநிதி இவரது அஞ்சலியில் "கண்களை மூடுகிறேன்; கல்யாணம் தெரிகிறார் -- ஒளி தெரிகிறது! கண்களைத் திறக்கிறேன்: கல்யாணம் இல்லை - கலையுலகு இருட்டாயிருக்கிறது" எனத் தெரிவித்தார்.

அ வில்சன் இதழாசிரியர்

நாளை
நமதே

# அனுபவம்

# மெதுவாகத்தான்

# வாழ்க்கையை

# கற்றுக் கொடுக்கும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com


அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com